MELUR MUNICIPALITY

Minutes of the Council Meeting held on **29.12.2023** (Urgent)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| | **29.12.2023 ஆம் தேதி கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்டம் முன்னிலை: திரு.உ.முகமதுயாசின், நகர்மன்றத்தலைவர்** | |
| 420 | **மன்றப்பொருள் எண்.1**<br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட பர்மா காலனி மற்றும் ஆர்.சி.பள்ளி கிழக்கு பகுதியில் குடிநீர் வசதி ஏற்படுத்த பகிர்மானக்குழாய்கள் இல்லை. எனவே இப்பகுதியில் பகிர்மானக்குழாய்கள் பதிக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.0.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 421 | **மன்றப்பொருள் எண்.2**<br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, மெயின் குழாய் வால்வுகளை வைத்து பம்பிங் செய்தல் மற்றும் குடிநீர் விநியோக செய்தல் ஆகியவைகளுக்கு குடிநீர் பணியாளர்கள் சப்ளை செய்யும் பணிக்கு 27.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>1. திரு.எம்.லத்திப், மேலூர் — 0.02% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு<br>2. திருவாளர்கள் தேவ் மோட்டார்ஸ் — 1.25% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம்<br>அலுவலகக்குறிப்பு<br>1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 0.02% குறைவாக வழங்கிய திரு.எம்.லத்திப் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியானது குடிநீர் சம்பந்தப்பட்ட பணியென்பதால் பணியின் அவரச அவசியம் கருதி திரு.எம்.லத்திப் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 422 | **மன்றப்பொருள் எண்.3**<br>மேலூர் நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் 2021-22ன் கீழ் நகராட்சிக்குட்பட்ட விரிவாக்க பணிகளில் 180Nos LED தெரு மின் விளக்குகள் பொருத்தும் பணி நடைபெற்று வருகின்றது. வார்டு 1 முதல் 27 வரையிலான தெருக்களில் SUIDF திட்டத்தின் கீழ் ஏற்கனவே உள்ள பழைய குழல் விளக்குகள், CFL விளக்குகள், சோடியம் ஆவிவிளக்குகள் மற்றும் இதர புற விளக்குகள் விநயிகோம் செய்து பொருத்தும் பணி நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் நகர்மன்ற தலைவர் அவர்களின அறிவுரையில் மேற்காணும் திட்டப்பணிகளின் கீழ் LED தெருமின்விளக்குகள் பொருத்தும் பணி நடைபெற்று முடிவதற்கு தாமதம் ஆகிவருவதால் பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பனிர்களின் கோரிக்கைகளை உடனுக்குடன் சரிசெய்து நகரில் உள்ள அனைத்து தெருவிளக்குகளையும் ஒளிரச்செய்திட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. அதன்படி வார்டு 1 முதல் 27 வரையிலான தெருக்களில் உள்ள தெருமின்விளக்குகளை பராமரிக்க போதுமான நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும், மேற்காணும் திட்டங்களில் உள்ள தெருமின்விளக்குகள் பொருத்தி பணி முடிவதற்கு தாமதம் ஆகும் என்பதாலும், திட்டப்பணிகள் முடிவடையும் வரையிலும், தனியார் தெருமின்விளக்கு பராமரிப்பு பணியாளர்களை கொண்டு பராமரிப்பு மற்றும் பழுதுநீக்கம் செய்து தெருவிளக்குகளை சரிவர ஒளிரச்செய்திட வேண்டிய அவசியம் உள்ளது. எனவே வார்டு 1 முதல் 27 வரையிலான தெருக்களில் உள்ள தெருமின்விளக்குகளை தனியார் தெருவிளக்கு பராமரிப்பு பணியாளர்களை கொண்டு உத்தேசமாக 3 மாத காலத்திற்கு (ஜனவரி 2024 முதல் மார்ச் 2024) வரை பராமரிப்பு மற்றும் பழுதுநீக்கம் செய்திட ஆகும் மதிப்பீட்டுத்தொகை ரூ.2.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>இந்நகரில் வசிக்கும் பொதுமக்களின் பாதுகாப்பு நலன்கருதி அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 423 | **மன்றப்பொருள் எண்.4**<br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 சொக்கம்பட்டி சின்னப்பயல் ஊரணி அருகில் உள்ள திறந்தவெளி கிணறு தூர்வாரப்படாததால் அப்பகுதியில் குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கு தண்ணீர் சீராக விநியோகிக்க முடியவில்லை. எனவே மேற்படி பகுதியில் உள்ள திறந்தவெளி கிணற்றினை தூர்வார்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கலாம்.<br>அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 424 | **மன்றப்பொருள் எண்.5**<br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் 300 mm dia, 200 mm dia, 100 mm dia, 90 mm dia, 80 mm dia, PVC மற்றும் GIகுடிநீர் பகிர்மானம் மற்றும் விநியோக குழாய்களை பழுதுநீக்கம் செய்யும் பணியினை தனியார் ஒப்பந்தாரர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்கான ஒப்பந்தகாலம் 31.12.2023 உடன் முடிவடைகிறது. மேற்படி பணியினை தனியார் மூலம் (Outsourcing) பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி பெற கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. எனவே நிர்வாக அனுமதி பெறப்படும் வரை நகர்மன்ற | அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கைகளை உடனுக்குடன் சரிசெய்ய வேண்டியுள்ளது. எனவே 01.01.2024 முதல் 31.05.2024 வரை குடிநீர் குழாய் பராமரிப்பு செய்யும் பணிக்கு தயார்செய்யப்பட்ட தோராய மதிப்பீட்டுத்தொகை ரூ.3.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மேற்படி பணியானது குடிநீர் சம்பந்தப்பட்ட பணியென்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியை ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>425</td>
<td>மன்றப்பொருள் எண்.6<br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலு உள்ள குடிநீர்பகிர்மானக்குழாய் மற்றும் விநியோகக் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு 27.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><td>1.</td><td>திரு.எஸ்.ரவி மேலூர்</td><td>0.05% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திருமதி.பி.அமுதா, மேலூர்</td><td>1.24% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம்</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0.05% குறைவாக வழங்கிய ஒப்பந்ததாரர் திரு.எஸ்.ரவி, என்பவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>426</td>
<td>மன்றப்பொருள் எண்.7<br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு பணியாளர்கள் சப்ளை செய்யும் பணிக்கு 27.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><td>1.</td><td>திருவாளர் ஸ்வஸ்திக் டிரேடர்ஸ்,மதுரை</td><td>0.05% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திருவாளர்கள் டெக்லைட் டிரேடர்ஸ், மதுரை.</td><td>1.24% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம்</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.05 சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருவாளர்கள் ஸ்வஸ்திக் டிரேடர்ஸ், மதுரை நிறுவனத்தின் விலைப்புள்ளியினை அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியானது தெருவிளக்கு சம்பந்தப்பட்ட அத்தியாவசிய பணியென்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி நிறுவனத்திறகு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

ஆணையாளர்,
மேலூர் நகராட்சி.